# கர்ப்பவதிகளுக்கு 2022 இலையுதிர்கால கொவிட்-19-தடுப்பூசி குறித்த தகவல்கள்

## முக்கியமானவையின் சுருக்கம்

- 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி அனைத்துக் கர்ப்பவதிகளுக்கும் கடுமையாகப் பரிந்துரை செய்யப்படுகின்றது.
- பூஸ்டர் தடுப்பூசி மூலம் நீங்கள் ஆகக்குறைந்தது தற்காலிகமாக கடுமையான நோய்த் தாக்குதல் பாதுகாப்பை மீண்டும் மேம்படுத்திக் கொள்ளலாம்.
- கொவிட்-19-தடுப்பூசி பாதுகாப்பானது - அத்துடன் கர்ப்ப காலத்திலும் கூட. அது உங்களை மற்றும் பிள்ளையைப் பாதுகாக்கின்றது.
- மேலதிக தகவல்களுக்கு → *தகவல்பத்திரம் «Informationen zur Covid-19-Impfung»*

**ஏன் நான் கர்ப்பக் காலத்தில் விசேடமாகப் பாதிக்கப்படலாம்?**
பல வித்தியாசமான காரணங்களால் ஒரே வயதுள்ள பெண்களில் கர்ப்பம் தரித்துள்ளவர்களுக்கு, கர்ப்பம் தரிக்காதவர்களிலும் பார்க்க கொவிட்-19ஆல் ஏற்படும் ஆபத்து உயர்வானதாகும். உதாரணமாக கர்ப்பக் காலத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. நீங்கள் கர்ப்பக் காலத்தில் நோய் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம். உதாரணமாக கொரானா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகலாம். மிகவும் கடுமையான நோய்ப் போக்கால், உங்களை சிலவேளைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சையளிக்கப்பட்டு, செயற்கைச் சுவாசச் சிகிச்சை வழங்க வேண்டி ஏற்படலாம். அதேவேளை கர்ப்பக் காலத்தில் கொரொனா நோயின் கடுமையான தாக்கம் இருந்தால், குழந்தை முன்னராகவே பிறக்கும் ஆபத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, பிள்ளை குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப்பிரிவில் (Neonatologie) வைத்துப் பராமரிக்க வேண்டிவரும்.
குழந்தை பிறந்த பின்னர் நீங்கள் விசேடமாகப் பாதிக்கப்படும் நபராக இருக்க மாட்டீர்கள், இருப்பினும் கொவிட்-19-தடுப்பூசி பாலூட்டும் காலத்திலும் பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. பாலூட்டும் தாய் தடுப்பூசி ஏற்றியிருந்தால், தாய்ப்பால் ஊடாக கோவிட்-19 க்கெதிரான நோய் எதிர்ப்புச்சக்தியை குழந்தைக்கும் வழங்குகின்றீர்கள்.

**தடுப்பூசி எவ்வாறு பாதுகாக்கின்றது?**
தடுப்பூசி உங்களையும் உங்கள் பிள்ளையையும் பாதுகாக்கின்றது. தடுப்பூசி ஊடாக உங்கள் உடலில் ஏற்படும் நோய் எதிர்ப்புச்சக்தி, பிள்ளையையும் பாதுகாக்கின்றது.

**எப்போது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்?**
12 வது கர்ப்ப வாரத்துக்குப் பின்பு நீங்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு நாங்கள் பரிந்துரைக்கின்றோம் (அதாவது கர்ப்பகாலத்தின் 3இல் 2வது காலத்தின் பின்பு). இருப்பினும் அடிப்படை ரீதியாக கர்ப்பத்தின் ஆரம்ப காலத்திலும் இது சாத்தியமாகும்.
அத்துடன் நீங்கள் கர்ப்பமாவதற்குத் திட்டமிட்டால், கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு நாங்கள் பரிந்துரைக்கின்றோம். தடுப்பூசியை இறுதியாக கொவிட்-19-தடுப்பூசி பெற்ற 4 மாதங்களின் பின்பு அல்லது கொரொனா வைரஸ் தொற்று ஏற்பட்டது தெரியவந்து 4 மாதங்களின் பின்பு பெற்றுக்கொள்ளலாம்.

வேறு தடுப்பூசிகள் செயல்திறனற்ற தடுப்பு மருந்துகளுடன் (உதாரணமாக தொற்றுக்காய்ச்சல் தடுப்பூசி) கொவிட்-19-தடுப்பூசி ஏற்றும் ஒரே வேளையில், அல்லது அதற்கு முன்பு அல்லது பின்பு பெற்றுக்கொள்ளலாம்.

**எவ்விதமான தடுப்பு மருந்து பரிந்துரை செய்யப்படுகின்றது?**
கர்ப்பவதிகளுக்கு 2022 இலையுதிர்காலத் தடுப்பூசிக்கு நாங்கள் mRNA-தடுப்பு மருந்தை, முன்னுரிமையாக மாற்றுத்-தழுவிய (bivalenter) mRNA-தடுப்பு மருந்து இருந்தால் அதைப் பரிந்துரைக்கின்றோம். இது பாலூட்டுபவர்களுக்கு உகந்தது. அதேவேளை இதுவரை பாவித்த (monovalenten) தடுப்பு மருந்துகளும் பொருத்தமானது. தற்போதைய தரவுகள், mRNA-தடுப்பு மருந்துகள் அத்துடன் புதிய Omikron- வகைகள் தொடர்ந்தும் கடுமையான நோய்தொற்றிலிருந்தும் வைத்தியசாலைக்கு செல்வதிலிருந்தும் பாதுகாப்பதை எடுத்துக் காட்டுகின்றன

**நான் இதுவரை கொவிட்-19க்கு எதிராகத் தடுப்பூசி பெறவில்லை என்றால், எது பொருந்தும்?**
அனைத்துக் கர்ப்பவதிகளும், 2022 இலையுதிர்காலம் வரை தடுப்பூசி ஏற்றாமல் இருந்தால், கொவிட்-19 தடுப்பூசியை இரு தடவைகள் 4 கிழமைகள் இடைவெளியில் ஏற்றிக்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.[1]

**நான் என்னை எவ்வாறு மேலதிகமாகப் பாதுகாத்துக் கொள்ளலாம்?**
ஒரே வீட்டில் கர்ப்பவதியுடன் வசிக்கும் அனைத்து நபர்களும் கூட தடுப்பூசி பெற்றுக்கொள்ள முடியும். தேகாரோக்கதியத்துடனுள்ள 65 வயதுக்குட்பட்ட தடுப்பூசி பெற்ற நபர்களுக்கு ஏற்கனவே இவர்களுக்கு உள்ள பாதுகாப்பின் பலனாக கடுமையான நோய் ஏற்படும் அபாயம் மிகவும் குறைவாகும். தடுப்பூசி உங்களுக்கு இலேசான நோயுடன் கூடிய தொற்றிலிருந்து சிறிதளவானதும்

[1] 30 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு முன்னுரிமையாக Pfizer/BioNTech வழங்கப்படும்.

குறுகிய கால பாதுகாப்பையும் வழங்குகின்றது. தற்போதைய வைரஸ் வகைகளைப் பொறுத்தவரை வைரஸ் பிறநபர்களுக்குப் பரப்புவதைத் தடுப்பூசி எவ்விதத்திலும் தடைசெய்யாது.

மேலதிக நடவடிக்கைகள் மூலம் நீங்கள் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் (உ.ம். உள்ளறைகளுக்குள் முகக்கவசம் அணிவது). இதற்காக எமது அடிப்படைக் கொள்கைகளை அறிந்து கொள்ளுங்கள் → *இணையப்பக்கம் «So schützen wir uns».*

**இதைவிட மேலும் எது முக்கியமானது?**
வேலையிடத்தில் தாய்க்குரிய பாதுகாப்புக் குறித்து கேள்விகள் இருந்தால் தயவுசெய்து SECO வின் அறிவுறுத்தலின்படி ஆலோசனை பெறுங்கள். *www.seco.admin.ch/mutterschutz*

## மேலதிக தகவல்கள்

**கட்டணம்:** பரிந்துரை செய்யப்படும் கொவிட்-19-தடுப்பூசி உங்களுக்கு இலவசமானது.

**தடுப்பூசி ஏற்றும் வசதிகள்:** எங்கு நீங்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம் என்பது குறித்து இணையத்தளத்தில் அல்லது உங்கள் மாநில தகவல் பக்கத்தில் நீங்கள் தகவல் அறிந்து கொள்ளுங்கள் *(www.foph-coronavirus.ch/cantons).*

கொவிட்-19-தடுப்பூசி குறித்த மேலதிக தகவல்களை நீங்கள் FOPH இணையத்தளத்தில் காணலாம்: *www.foph-coronavirus.ch/vaccination* அல்லது உங்கள் வைத்தியரிடம் அல்லது உங்கள் மருந்தகத்தில் கேளுங்கள்.

**இணையவழி:**

- *Wie funktioniert die Covid-19-Impfung? | BAG (bag-coronavirus.ch)*
- *Häufig gestellte Fragen (FAQ) (admin.ch)*